10.02.2025.

கூடுதல் அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் விழுப்புரம் )

அமர்வு வழக்கு எண். 375/2021

அ.சா.13

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.பி. வெங்கடேசன் | | |
| த/பெ | பூபாலன் | | |
| கிராமம் | விழுப்புரம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 42 /2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 26/04/2021 ந் தேதி விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக நான் பணியிலிருந்த போது சிவபெருமான் பாளையத்தை சேர்ந்த குப்பன் மகன் ஐயப்பன் என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் வட்ட ஆய்வாளர் அவரிடம் இறந்துபோன ஐயப்பனின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய கடவு சீட்டு, வேண்டுகோள் கடிதம் பெற்று விழுப்புரம் முண்டியம்பாக்கம்அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை சென்று வேண்டுகோள் கடிதத்தை மருத்துவரிடம் ஒப்புவித்து பிரேதத்தை அடையாளம் காண்பித்தேன். பின்பு பிரேத பரிசோதனையின் போது உடன் இருந்து பிரேதத்தில் இருந்து சேகரம் செய்யப்பட்ட உள்ளுறுப்புகளை விழுப்புரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில்

ஒப்புவித்தேன். பிறகு ஆய்வாளரிடம் இவற்றை ஒப்படைத்ததை குறித்து தகவல் தெரிவித்தேன். என்னை இது சம்மந்தமாக ஆய்வாளர் அவர்கள் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடவு சீட்டின் வரிசை எண். எனக்கு ஞாபகம் இல்லை. பிரேத பரிசோதனைக்கு பின்பு என்னிடம் எத்தனை மணிக்கு பிரேதம் ஒப்படைக்கப்பட்டது என்றால் 2 மணிக்கு ஒப்படைக்கப்பட்டது. பிரேத பரிசோதனைக்கு பிறகு நல்லடக்கம் செய்ய யாரிடம் எத்தனை மணிக்கு ஒப்படைத்தேன்என்றால் உறவினர் தான் வாங்கினார். பெயர் ஞாபகம் இல்லை. நான் இந்த பணிக்கு அமர்த்தப்படவில்லை என்றும், ஆய்வாளரின் வேண்டுகோளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>**

**<u>இல்லை</u>**